அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR **EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS**

# அரையாண்டுத்தேர்வு

# 2021/2022

# தமிழ்

## ஆண்டு 8

| | |
|---|---|
| **நேரம்: 150 மணித்துளிகள்**<br><br>**நாள்: 29.01.2022** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்: 16** |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

## பகுதி 1 – எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள மொத்த எழுத்துகளின் எண்ணிக்கை
   1. இருநூற்றுப்பதினாறு
   2. பன்னிரண்டு
   3. பதினெட்டு
   4. இருநூற்று நாற்பத்தேழு

2. தமிழர்கள் அதிகமாக வாழும் நாடு
   1. சிங்கப்பூர்
   2. இந்தியா
   3. மலேசியா
   4. ஈழம்

3. நல்ல மனிதர் மிகப்பணிவுடன் மனம் நிறைந்து இருப்பர். இதில் வந்துள்ள எழுவாய் அடைமொழி
   1. மனிதர்
   2. பணிவு
   3. நல்ல
   4. மனம்

4. நாம் வாழும் நாட்டிலுள்ள வரைகள் அழகாகத் தோன்றும். வரைகள் என்பது
   1. கடல்கள்
   2. மலைகள்
   3. ஆறுகள்
   4. காடுகள்

5. எதிர்காலம் காட்டும் இடைநிலைகளாக அமைவன
   1. கின்று, கிறு
   2. த், ட்
   3. ப், வ்
   4. த், ன்

6. சிறுவர் நாடகம் நடித்தனர். இதில் நடித்தனர் என்பது
   1. ஆண்பால் இறந்தகாலம்
   2. பெண்பால் இறந்தகாலம்
   3. பலர்பால் இறந்தகாலம்
   4. பலவின்பால் இறந்தகாலம்

7. வெண்கல இசைக்கருவிகளுள் ஒன்று
   1. பறை
   2. தாளம்
   3. ஏழில்
   4. யாழ்

1 2 3 4

8. தமிழிசையின் தொன்மைக்குச் சான்றாக விளங்கும் இலக்கியம்
   1. சிலப்பதிகாரம்
   2. மணிமேகலை
   3. நளவெண்பா
   4. மகாபாரதம்

9. ‘இளமையில் கல்’ என ஔவையார் பாடியுள்ளார். இளமை என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   1. முதுமை
   2. பழைமை
   3. செம்மை
   4. புதுமை

10. ஈழநாடு என்பதன் சொற்பிரிப்பு வடிவம்
   1. ஈழம் + நாடு
   2. ஈழ + நாடு
   3. ஈழந் + நாடு
   4. ஈ + நாடு

11. எழுபத்தைந்தாவது ஆண்டின் நிறைவில் கொண்டாடப்படும் விழா
   1. பவளவிழா
   2. வைரவிழா
   3. பொன்விழா
   4. வெள்ளிவிழா

12. நைல் ஆற்றின் அணை தமிழர்களால்
   1. கட்டியது.
   2. கட்டினார்கள்.
   3. கட்டப்பட்டது.
   4. கட்டினான்.

13. நூல் வெளியீட்டாளரால் அந்நூலுக்கு எழுதப்படும் உரை
   1. முன்னுரை
   2. ஏற்புரை
   3. பதிப்புரை
   4. அணிந்துரை

14. இனியன் அதிகவேலை செய்து களைத்தான். இதில் வந்துள்ள வினையெச்சம்
   1. செய்து
   2. வேலை
   3. அதிக
   4. இனியன்

1 2 3 4

15. அறநூல் காலம் எனவும் அழைக்கப்படும் காலம்
    1. சங்ககாலம்
    2. சங்கமருவியகாலம்
    3. பல்லவர்காலம்
    4. சோழர்காலம்

16. போர் + படை என்பதன் புணர்ச்சி வடிவம்
    1. போற்படை
    2. போர்ப்படை
    3. போர்படை
    4. போட்படை

17. சங்கமருவிய காலத்தில் இயற்றப்பட்ட காப்பியம்
    1. வளையாபதி
    2. சீவகசிந்தாமணி
    3. மணிமேகலை
    4. குண்டலகேசி

18. ஆற்றங்கரையில் தவளைகள் துள்ளி
    1. விழையாடுகின்றன.
    2. விளையாடுகின்றன.
    3. விலையாடுகின்றன.
    4. விளையாடுகிறது.

19. நிலவன் கூர்மதி உடையவன். இச்சொல்லியத்தில் கூர் என்பது
    1. இடைச்சொல்
    2. பெயர்ச்சொல்
    3. வினைச்சொல்
    4. உரிச்சொல்

20. அக்காவும் தங்கையும் வண்ணவண்ண ஆடைகள் அணிந்தனர். இச்சொல்லியத்தில் வந்துள்ள அடுக்குத்தொடர்
    1. வண்ணவண்ண
    2. அக்காவும் தங்கையும்
    3. ஆடைகள்
    4. அணிந்தனர்

21. அன்பில் உயர்ந்தவள் அன்னை. இதில் வந்துள்ள வேற்றுமை
    1. மூன்றாம் வேற்றுமை
    2. ஐந்தாம் வேற்றுமை
    3. ஏழாம் வேற்றுமை
    4. இரண்டாம் வேற்றுமை

1 2 3 4

22. கயிலாயவன்னியனின் அரசு அமைந்திருந்த இடம்
    1. உடையாவூர்
    2. பனங்காமப்பற்று
    3. கற்சிலைமடு
    4. முல்லைத்தீவு

23. புவி மாசடைகிறது. ஓசோன்படலம் வெப்பமடைகிறது. இவ்விரு சொல்லியங்களையும் இணைக்கப் பயன்படும் இணைப்பிடைச்சொல்
    1. அதனால்
    2. ஏனென்றால்
    3. ஆனால்
    4. இருப்பினும்

24. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் தொகுப்பில் உள்ளவை
    1. 12 நூல்கள்
    2. 18 நூல்கள்
    3. 8 நூல்கள்
    4. 10 நூல்கள்

25. நண்பா! உனது எழுதுகோலை எடு. இச்சொல்லியத்தில் விளிவேற்றுமை ஏற்றசொல்
    1. உனது
    2. எடு
    3. எழுதுகோலை
    4. நண்பா

(25X1=25புள்ளிகள்)

## 2. கீழ்க்காணும் சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுக.

1. இசைக்கருவிகள்:

_______________________________________________

_______________________________________________

2. ஏற்றத்தாழ்வு:

_______________________________________________

_______________________________________________

3. குடியுரிமை:

_______________________________________________

_______________________________________________

(3X2=6புள்ளிகள்)

**3. கீழ்க்காணும் வினாக்களுள் நீங்கள் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. புலம்பெயர்ந்த தமிழர்கள் எவற்றைப் பேணவேண்டுமென எண்ணினர்?

_______________________________________________

_______________________________________________

2. தமிழர் இசைக்கருவிகளின் வகைகளுள் இரண்டிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

_______________________________________________

_______________________________________________

3. சங்ககால மக்களின் வாழ்க்கை முறை எவ்வாறு இருந்தது?

_______________________________________________

_______________________________________________

4. மகாகவி து.உருத்திரமூர்த்தியின் இலக்கிய வடிவங்களுள் இரண்டு எழுதுக.

_______________________________________________

_______________________________________________

5. கார் பொழிந்ததால் ஊர் மகிழ்ந்தது. இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள ஆகுபெயர்களுள் ஒன்றினை எழுதுக.

_______________________________________________

6. முல்லைப்பூ போன்ற சிரிப்பு. இவ் உவமை அணியிலுள்ள உவமானம், உவமேயம் என்பவற்றை எழுதுக.

உவமானம்:_______________________________________

உவமேயம்:_______________________________________

7. அண்ணனோடு தங்கையும் சென்றாள். இச்சொல்லியத்தில் வந்துள்ள வேற்றுமை உருபு, பொருள் என்பவற்றை எழுதுக.

வேற்றுமை உருபு:_________________________________

பொருள்:_________________________________________

(5X2=10புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் பாடலை வாசித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.**

மீன்கள்கொடி கோடிசூழ வெண்ணிலாவே! - ஒரு
வெள்ளியோடம் போலவரும் வெண்ணிலாவே!

இரவையும்நண் பகலாக்கும் வெண்ணிலாவே! - உன்னை
இராகுவும் விழுங்கிடுமோ? வெண்ணிலாவே

வளர்ந்து வளர்ந்துவந்த வெண்ணிலாவே! - மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ? வெண்ணிலாவே!

பளிங்குபோலும் உன்னுருவில் வெண்ணிலாவே! - கறை
பற்றியே இருப்பதேனோ? வெண்ணிலாவே!

- கவிமணி. தேசிக விநாயகம்பிள்ளை

1. மீன்கள்கொடி கோடிசூழ வெள்ளியோடம் போல வருவது எது?

_______________________________________________

2. வெண்ணிலா எதை நண்பகலாக்குகிறது?

_______________________________________________

3. வெண்ணிலாவின் உருவம் எதைப்போல் இருப்பதாகக் கவிஞர் கூறுகிறார்?

_______________________________________________

4. இப்பாடல் எக்காட்சியைக் காட்சிப்படுத்துகிறது?

_______________________________________________

(4X1=4புள்ளிகள்)

**5. கீழ்க்காணும் சொல்லியங்களை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

1. நாம் தூய்மையான காற்றைச் சுவாசிக்க வேண்டும்.

______________________________________________

2. சேரன் கோடை விடுமுறைக்குத் தாயகம் செல்வான்.

______________________________________________

3. சிறுவயதிலிருந்தே வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

______________________________________________

4. தமிழர் உலகின் பல நாடுகளில் வாழ்கிறார்கள்.

______________________________________________

5. எமது தமிழ்ப்பள்ளியில் நேற்று ஆண்டுவிழா நடைபெற்றது.

______________________________________________

(5×1=5 புள்ளிகள்)

**7. கீழ்வரும் தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. தமிழிசை
2. மகாகவி து. உருத்திரமூர்த்தி
3. நூலகம்

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- நூலகம் செயற்படும் முறை
- நூலகத்தின் பயன்பாடுகள் (15புள்ளிகள்)
- நூலகத்தின் மூலம் நீங்கள் பெற்ற பயன்கள்

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. கீழ்க்காணும் பந்தியை வாசித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.**

நாம் வாழுகின்ற இவ்வுலகம் காலத்துக்குக் காலம் பல்வேறு பேரிடர்களை எதிர்கொண்டு வருகிறது. இயற்கை அழிவுகள், போர், கொடிய நோய்த்தொற்று என்பனவற்றைப் பேரிடர்கள் எனலாம். கடந்த இரண்டு ஆண்டுகளாக 'கொரோனா' என்னும் கொடிய நோய்த்தொற்று உலக மக்களைப் பெரிதும் அச்சுறுத்தி வருகிறது. இந்நோய்த்தொற்று 2019 டிசம்பரில் சீனாவின் ஊகான் மாகாணத்தில் முதன்முதலாகக் கண்டறியப்பட்டது. 'கொரோனா' நோய் ஏற்படுவதுக்கு ஒரு வகை வைரசே கரணியம் ஆகும். மருத்துவ ஆய்வாளர்கள் இவ்வைரசுக்கு 'கோவிட் 19' என்னும் பெயரைச் சூட்டியுள்ளார்கள். உலகளவில் முப்பது கோடி மக்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அண்மைக்காலம் வரை கொரோனாவினால் ஐம்பத்து நான்கு இலக்கத்துக்கு(இலட்சம்) மேற்பட்ட மக்கள் உயிர் இழந்துள்ளார்கள். ஒவ்வொரு நாளும் உயிர் இழப்போரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இந்நோய் பரவாது தடுப்பதற்கு முகக்கவசம் அணிதல், தொற்று நீக்கிகளைப் பயன்படுத்துதல், பொது இடங்களில் குழுமக இடைவெளிகளைப் பேணுதல் போன்ற வழிமுறைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டியது அகத்தியமாகும்.

1. இன்று உலகை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ள நோய் எது?

________________________________________

2. பேரிடர்கள் இரண்டு எழுதுக.

________________________________________

3. 'கொரோனா' நோயை ஏற்படுத்திய வைரசின் பெயர் என்ன?

________________________________________

4. இந்நோய்த்தொற்று முதன்முதலாக எங்கே கண்டறியப்பட்டது?

________________________________________

5. 'கொரோனா' நோய் பரவாது தடுப்பதற்குரிய வழிமுறை ஒன்று எழுதுக.

________________________________________

(5X2=10 புள்ளிகள்)

**2. மாறியிருக்கும் சொல்லியங்களை ஒழுங்குபடுத்தி, பந்தி அமைப்புக்குப் பொருத்தமான எண்களைக் கட்டத்தினுள் எழுதுக.**

1. உடனே அவள் குருவிக்குஞ்சைத் தூக்கி, அதன் கூட்டினுள் வைத்தாள்.

2. யாழினி தனது தம்பியுடன் வீட்டின் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோது, கீச்கீச் என்று குருவி கத்தும் ஒலி கேட்டது.

3. 'எல்லா உயிர்களையும் அன்புசெய்ய வேண்டும்' என்று ஆசிரியர் கூறியது அப்பொழுது யாழினிக்கு நினைவுக்கு வந்தது.

4. மரத்தின் கீழே குருவிக்குஞ்சு ஒன்று விழுந்து கிடப்பதை இருவரும் கண்டார்கள்.

5. இருவரும் ஒலி எங்கிருந்து வருகிறது என்று தேடிப் பார்த்தார்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

(5X1=5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 06 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 04 | | | |
| 5 | 05 | | | |
| 6 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |